மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுதியாக நீங்கள் தெரிந்து கொள்ளாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சி பற்றி கேள்வி நேரத்தில் கொண்டு வந்து சேர்ப்பது சரியல்ல. எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். நீங்கள் வேறுவிதமாக கேட்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து திறந்து வைக்கவேண்டும் என்பது போல கேள்வி கேட்கலாமே தவிர அவர் வருகிறார் என்றால் அது உறுதியாக வந்து விடு கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காக வாழும் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் திருக்கரத்தால் அந்த நிகழ்ச்சிக்குப் புஞ்சை புளியம்பட்டியில் ஜீவா போக்கு வரத்துக் கழகத்தினுடைய கிளை நிலையத்திற்கு அவருடைய திருக்கரத்தால் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6½கோடி தமிழ் மக்களுடைய இதயங்களிலே குடிகொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்றத் தலைவராக இருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய திருக்கரத்தால் தான் அது திறக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23; திரு. க. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

23—

விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கும் நேரத்தை அதிகரித்தல்.

*307 திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயத்திற்கு மின்சாரம் பகலில் 6 மணி நேரம் வழங்கப்படுவதை 9 மணி நேரமாக அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது விவசாய பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது :

முதல் பிரிவு: காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை.

இரண்டாம் பிரிவு : பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை.

முதல் பிரிவு: } இரவு 10 மணி முதல் மறுநாள்
இரண்டாம் பிரிவு: } காலை 6 மணி வரை.

அனைத்து விவசாய பம்பு செட்டுகளும் கட்டுப்பாடு இன்றி ஒரே நேரத்தில் இயங்கினால் உத்தேச மின் தேவையின் அளவு சுமாராக 4,465 மெகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து விவசாய பம்புசெட்டுகளுக்கும் பகல் நேரத்தில் அதிக நேரம் மின்சாரம் அளித்தால் இருபிரிவு பம்புசெட்டுகளும் ஒரேநேரத்தில் இயங்க 3,900 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும். ஆனால், தமிழ்நாடு மின் கட்டமைப்பின் தற்போதைய உற்பத்தித் திறன் 3,000 முதல் 3,100 மெகாவாட் ஆகும். எனவே விவசாய பம்பு செட்டுகளுக்குப் பகல் நேரத்தில் 6 மணி நேரத்திற்குமேல் கூடுதலாக மின்சாரம் வழங்க இயலாது.

முற்பகல் 9-50,

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் இரவிலே பயன்படுத்துகின்ற மின்சாரத்தை குறைத்து, பகலிலே அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இரவிலே பயன்படுத்துகின்றபோது—விஷப்பாம்புகள், விஷப்பூச்சிகளால் அவர்களுடைய உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள், விவசாயிகள் நலனைக் கருதி, இரவிலே கொடுக்கின்ற மின்சாரத்தை குறைத்து, பகலிலே நேரத்தை நீட்டித்து கொடுப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து அரசு மிகுந்த கவனத்தோடு பரிசீலிக்கும்.

1991 செப்டம்பர் 13]

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு அரசு மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை கொடுக்கிறது. அதைப்போல, விவசாயத்திற்கும் முன்னுரிமை கொடுத்து, நமது இதய தெய்வம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே விவசாயிகளுடைய நலன்கருதி, மின்சார பாக்கி முழுவதையும் ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு இன்றைக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதன் காரணமாக ஏறத்தாழ அரசுக்கு 540 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். ஆகவே, விவசாயத்திற்குக் கொடுக்கப்படுகின்ற மின்சாரத்தினுடைய அளவு என்றைக்கும் குறைக்கப்படாது. தற்போது இலவசமாகத்தான் மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் மின்சாரம் கொடுக்கும் நேரம் 6 மணி நேரம், 9 மணி நேரம் என்று இருந்தாலும்கூட, பல இடங்களிலே வோல்டேஜ் கம்மியாகின்ற காரணத்தினாலே மோட்டார் ஓடுகின்றபோது பர்ன் ஆகிவிடுகின்றது. அப்படி ஓடுகின்றபோதே பர்ன் ஆகிவிடுகின்ற ஒரு நிலைமை ஏற்படும்போது அந்த மோட்டாரை மறுபடியும் ரீ-வைண்டிங் செய்யும்போது, புதிதாக ஒரு மோட்டார் வாங்குவதற்கு என்ன செலவாகுமோ அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு செலவு ஏற்பட்டு அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் புதிதாக சப்-ஸ்டேஷன்களைப் போடவேண்டுமென்று ஒரு இலக்கை நிர்ணயம் செய்து இருக்கிறோம். அப்படி எங்கெங்கெல்லாம் சப்-ஸ்டேஷன்களைப் போடவேண்டுமென்று நினைக்கிறோமோ, அவைகளை விரைவிலே அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, எல்லா இடங்களிலும் லோ-வோல்டேஜ் என்று சொல்லப்படுகின்ற, குறைந்த அளவு மின்சக்தி இருப்பதில்லை. சிற்சில இடங்களில் அந்த மாதிரி புகார்கள் வருகின்ற நேரத்திலே, அது எங்களுடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்திலே, உடனடி

யாக அந்த மின்சார வாரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு அவைகள் சீர்செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட புகார்கள் வருமானால் அதை உடனடியாகக் களைய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, கூடுதலாக துணை மின்நிலையங்கள், சப்-ஸ்டேஷன்களைத் தொடங்குவதற்கு பல்வேறு புரோபோசல்ஸ் என்று சொல்லப்படுகின்ற, ஆரம்பகால நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். எத்தனை சப்-ஸ்டேஷன்களைப் போடுகின்றோம் என்ற விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு, தனிக் கேள்வியாகப் போட்டால் அது சம்பந்தமான பதிலை இந்த மாமன்றத்திற்கு வைக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். நாகூர் மீரான்.

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்தியத் திருநாட்டின் முதுகெலும்பு என்று அழைக்கப்படும் விவசாயிகளின் நலன் கருதி, பகல் நேரங்களில் அவர்களுக்கு 12 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9 மணி நேரத்திற்கே மின்சாரம் வழங்குவதற்கு இயலவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இது சம்பந்தமாக விவரமான பதிலை நான் தந்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் விவசாயப் பெருங்குடிமக்களுக்கு பல நல்ல திட்டங்களைக் கொடுத்து இருக்கின்றார்கள். விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே 1987-ஆம் ஆண்டுவரைதான் கொடுத்து இருக்கின்றார்கள். அதை, கருணையுள்ளத்தோடு, இந்த ஆண்டுவரையுள்ள அத்தனை விண்ணப்பங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அரசு 1986 வரை சிங்கிள் போஸ்ட் கனெக்ஷன் கொடுப்பதற்கு உத்தரவிட்டார்கள். ஆனால், (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி மின்சாரம் வழங்கும் நேரத்தை அதிகப்படுத்துவது பற்றியது. நீங்கள் சிங்கிள் போஸ்ட் பற்றி சொல்கிறீர்கள்.

திரு. ஆர். சிங்காரம்: அதுவும் சேர்ந்து வருகிறது இதிலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இதிலே சேர்ந்து வராது. ஆகவே, நேரத்திற்கு உரிய கேள்விக்குச் செல்லுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: தமிழகத்திலே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மிக அதிகமாக தேவை இருப்பதைத் தீர்க்கும் பொருட்டு அரசு ஏதாவது புரட்சித் திட்டங்களை வைத்து இருக்கிறதா? அதே நேரத்தில் அந்த சிங்கிள் போஸ்ட்-இல் 1991வரை மின்சாரம் கொடுப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சிங்கிள் போஸ்ட் விஷயமாக இந்தக் கேள்வியிலே கேட்காதீர்கள். முதல் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வரவர்களுடைய அறிவுரையின் பேரில் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட நேரத்திலிருந்து மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற அந்த முனைப்போடு இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களை இன்றைக்கு டெல்லியிலே மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். அது தொடர்பாக நானும் அன்றைக்கு டெல்லிக்குச் சென்று மாண்புமிகு முதல்வரவர்களுடைய அறிவுரையின் பேரில் நம்முடைய மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்களை அங்கே மத்திய அரசினிடத்திலே முன் வைத்திருக்கிறோம். ஆகவே, அது சம்பந்தமாக நமது தொலைக் காட்சியிலும் விவரமாக விவரங்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே எதிர்

[1991 செப்டம்பர் 13

காலத்திலே மின் தட்டுப்பாடு இருக்கக் கூடாது என்பதிலே மிகவும் கவனமாக இருக்கிறது. அதைப்போல, மின் வெட்டு இல்லாத ஆண்டாக இந்த ஆண்டுதான் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்ல் தம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒர்க்கிங் கண்டிஷன்கள் இருக்கின்றன. நல்ல சூழ்நிலையிலே, பாதுகாப்பான சூழ்நிலையிலே, வேலை செய்கிறார்கள். ஆனால், விவசாயிகளைப் பொறுத்தவரையில், இந்த மின்சாரம் இரவிலும், பகலிலும் மாறி மாறிக் கொடுக்கப்படுகின்ற காரணத்தினாலே, இரவிலே ஓய்வு இல்லாத நிலையிலே, பகல் பூராவும் வேலை செய்துவிட்டு, இராத்திரியும் போய் செய்ய வேண்டிய சூழ்நிலை, பாதுகாப்பாற்ற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு, காலையிலே 6-லிருந்து 12 மணி வரைக்கும் கொடுத்தால், சாயந்திரம் 3-லிருந்து 6 வரை, அது மாதிரி சாயங்காலம் 1 மணியிலிருந்து 6 மணி வரைக்கும் கொடுப்பதாக இருந்தால் காலையிலே 6 மணியிலிருந்து 9½ மணி வரை என்று அந்த மாதிரி மூன்று மணி நேரத்தைப் பகலிலே கூட்டித் தந்தால் அந்த விவசாயிகளுக்குப் பகலிலே வேலைசெய்துவிட்டு இராத்திரியில் ஓய்வு எடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கும். பாதுகாப்பும் கிடைக்கும். இதை அமைச்சர் கருத்திற்கொண்டு செயல்படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தலைவரவர்களே, இதுகுறித்து தகுந்த கவனத்தோடு அரசு பரிசீலித்து முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் விவசாயிகளுக்கு இனாமாக மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். சிறு விவசாயிகளுக்கு மட்டும் மின்சாரக் கட்டணம் இனாமாக வழங்கி, பெரு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கலியபெருமாள், இது விவசாயிகளுக்கு எவ்வளவு மணி நேரம் மின்சாரம் கொடுப்பது என்பது பற்றிய தகவல். இலவச மின்சாரமா, அது சிறு விவசாயிகளுக்கா, பெரு விவசாயிகளுக்கா என்பது இந்தக் கேள்வியிலே வராது. இந்த நேரத்தைப் பொறுத்து ஏதாவது தனிக் கேள்வி இருக்கிறதா?